# செங்கோட்டை நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

### செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு வைகாசி திங்கள் 6ம் நாள் 20–05–2022 வெள்ளிக் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சியின் 2021–2022ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 03 :**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்து, அரசாணை (நிலை) எண்.52. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.490032/2012/ஆர்1 நாள்.01.04.2022 கடிதத்தின் படி 01–04–2022 முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, சொத்துவரி சீராய்வு சுயமதிப்பீட்டு படிவம் அச்சுப் பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி பெற்றுள்ள தகுதியான கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 37 நாள் 27–04–2022ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி சுயமதிப்பட்டு படிவம் அச்சுப் பணிகள் உடன்

மேற்கொள்ள 27–04–2022ம் தேதி வெளியிடப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | | ஸ்ரீ பாலமுருகன் ஆப்செட், 452, தென்காசி ரோடு, IDBI Bank எதிரில், இராஜபாளையம் என்பவருடைய ஒப்பந்தக் கேள்வி (100 படிவத்திற்கு) | மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப்ரேட்டிவ் சொஸைட்டி லிமிடெட், 41/24A, ராஜா கோவில் தெரு, தென்காசி என்பவருடைய ஒப்பந்தக் கேள்வி (100 படிவத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி பொது சீராய்வு சுயமதிப்பீட்டு படிவம் அ4 வடிவில் அச்சுப் பணிகள் மேற்கொள்ளும் பணி. | குடியிருப்பு கட்டிடம் | ரூ.285/- | ரூ.250/- |
| 2 | | வணிக க் கட்டிடம் | ரூ.285/- | ரூ.250/ |
| 3 | | தொழிற்சாலை கட்டிடம் | ரூ.285/- | ரூ.250/ |

அலவலகக் குறிப்பு :

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப்ரேட்டிவ் சொஸைட்டி லிமிடெட், தென்காசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தக் கேள்வித் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

**அலுவலக குறிப்பு ஏற்று மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் TN76P8356 (Lorry) டயர் 25–03–2017ல் வாங்கப்பட்டு நான்கு வருடங்கள் மேலாகி விட்டதால் டயர் பட்டன் இல்லாமல் அடிக்கடி பஞ்சர் ஆகிவருவதாலும், பொது சுகாதாரப் பணியினை கருத்திற்கொண்டு மேற்கண்ட வாகனத்திற்கு புதிதாக 6 டயர்கள் மாற்றம் செய்திட அவசர அவசியம் கருதி தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி 11–04–2022ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| | | |
| 1 | NethaShree Tyres,<br>142/5, Road No 11,<br>TN Puthukkudi, Tenkasi Road,<br>Near Govt Hr Sec School,<br>Puliyangudi- 627 855 | ரூ.55,200/- |
| 2 | Kumaran Tyres,<br>3/526, Tenkasi-shengottah Main Road,<br>Ilanji – 627 805 | ரூ.54,600/– |

(ந.க.எண் ; 804/2020/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திள்.குமரன் டயர்ஸ், இலஞ்சி என்பவருடைய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள குமரன் டயர்ஸ் என்பவருடைய விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

செங்கோட்டை நகராட்சி வளமீட்பு பூங்கா கலவை உரக்கிடங்கில் தினம் தோறும் கொட்டப்பட்டு வரும் கலவை மக்காத குப்பைகள் தற்போது பரவலாக வாகனங்கள் செல்ல இயலாத நிலையிலும், பொது சுகாதார பணிக்கு தொய்வு ஏற்படுத்தக் கூடிய நிலையிலும் உள்ளதால், கலவை உரக்கிடங்கில் கொட்டப்படும் மக்காத குப்பைகளை (Mixed Non Biodegradable Waste) Hitachi இயந்திர வாகனம் மூலம் அப்புறப்படுத்திடும் பணிகள் உடன் மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 40 நாள் 27–04–2022ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி 04–05–2022ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்காணும் பணிகளை கூடுதலாக HITACHI இயந்திர வாகனம் (Chain Dozer) கொண்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | Metro Earth Movers<br>1-7-4, South Street, Puliyarai – (PO), Shenkottai(Tk)<br>Tenkasi | 1 Hour = 1200<br>1 Day Batta = 500<br>Transport = 3000 |
| 2 | Siva Sakthi Earth Movers<br>33/21, Kaliyammal Kovil Street, Tenkasi | 1 Hour = 1500<br>1 Day Batta = 800<br>Transport = 5000 |

**(ந.க.எண் ;1551/2021/எச்1)**

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெட்ரோ எர்த் மூவர்ஸ், செங்கோட்டை என்பவருடைய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மேற்கொள்ள இருக்கும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.30,000க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள மெட்ரோ எர்த் மூவர்ஸ் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 06 :**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 06.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி கே.சி ரோடு பகுதியிலுள்ள வாரச்சந்தையிலுள்ள பழைய கட்டிடங்கள், கூடாரங்கள் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் | 3.50 | 1. திரு.பி.விஜயபாலன் | 0.23 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | 2. திரு.எஸ்.ஆறுமுகம் | 0.77 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | செங்கோட்டை நகராட்சி பம்புஹவுஸ் ரோடு பகுதியிலுள்ள தினசரி சந்தையிலுள்ள பழைய கட்டிடங்கள், கூடாரங்கள் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் | 1.70 | 1. திரு.பி.விஜயபாலன் | 0.27 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | 2. திரு.எஸ்.ஆறுமுகம் | 0.67 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலககுறிப்பு..

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் . 1 ல் மதிப்பீட்டை விட 0.23 சதவீதம் குறைவாகவும் வரிசை எண். 2 க்கான பணிக்கு மதிப்பீட்டை விட 0.27 சதவீதம் குறைவாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.விஜயபாலன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணி திட்டப் பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.விஜயபாலன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>மன்றப் பொருள் 07 :</u>

செங்கோட்டை நகராட்சி **அனைத்து வீடுகளுக்கும்** 24 மணி நேரமும் அம்ரூட் 2.0 ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் **குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தவும்** அதற்கான திட்டக் கருத்துருவினை தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் தயார் செய்து அனுப்பி வைக்கவும் **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி** மேற்படி **திட்டத்தினை செயல்படுத்துவதில் உள்ள** இடர்பாடுகளை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்து முழு வடிவில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்குரிய திட்டக்கருத்துருவினை தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் தயார் செய்தல் அவசியமாகிறது. பணியின் அவசர அவசியம் கருதி 5.5.2022 **அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.** மேலும் மேற்படி Consultancy **க்கான கட்டணத்தினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | Imayam Creators<br>Tiruvarur Main Road Puthur, Nagapattinam | திட்ட மதிப்பில் 2.5% மற்றும் GST |
| 2. | ECT Infra Solutions Pvt. Ltd<br>Gandhi Nagar, Adayar<br>Chennai | திட்ட மதிப்பில் 2.25% மற்றும் GST |
| 3. | SSG Engineering<br>Kasthuri bai Nagar, Chennai | திட்ட மதிப்பில் 2% + GST |

mYtyfF¿¥ò..

அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 SSG Engineering, சென்னை நிறுவன விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி Consultancy க்கான கட்டணத்தினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 08 :**

நகர்மன்றத் தலைவர் திருமதி.சு.ராமலட்சுமி அவர்கள் முன் மொழியும் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம்

செங்கோட்டை நகராட்சி கேரள அரசு திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து 1921ஆம் ஆண்டு நகராட்சி அந்தஸ்திலிருந்துள்ளது. செங்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகளை கடந்து 101ஆம் ஆண்டினை அடிவைத்துள்ள இந்த பொன்னான வேளையில் இந்நகர்மன்றத்தின் உறுப்பினர்களாக நாமெல்லாம் தேர்வு செய்யப்பட்டுள்ள நிகழ்வு மிகவும் பெருமை கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

இந்நகரில் வாழ்ந்திட்ட சுதந்திர போராட்ட வீரர் வீரவாஞ்சிநாதன், சாவடி அருணாசலம்பிள்ளை, கணிதமேதை டாக்டர் எஸ்.எஸ் பிள்ளை, திரைப்பட ஜாம்பவான் பி.யு.கிட்டப்பா போன்றோர் நமது செங்கோட்டைக்கு கிடைத்திட்ட வீரத்திலகங்கள் ஆகும்.

இந்நகர்மன்றம் உருவாகி 100 ஆண்டுகளை கடந்துவிட்ட நிலையில் நகரின் விரிவாக்க எல்லை என்பது 2.68 ச.கி.மி மட்டுமே உள்ளது. வருவாயில் மிகவும் நலிந்த நகராட்சியாக கடந்த 100 ஆண்டுகளாக இருந்துள்ளதும் மிகவும் வேதனை ஆன ஒன்றாகும். இந்நகர மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கூட தன்னிறைவு அடையாத நகராட்சி என்றால் அது நமது செங்கோட்டை நகராட்சியாகத் தான் இருக்கும். ஆகவே 100 ஆண்டுகளை கடந்த செங்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு நிதி விடுவித்து அலுவலக கூடுதல் கட்டிடம் பழைய அலுவலக கட்டிடத்தினை அப்புறப்படுத்திவிட்டு கட்டுவதற்கும் நகராட்சி பகுதியில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சமுதாய கூடம் அமைவதற்கும் ரூ.500.00 லட்சம் இந்நகராட்சிக்கு சிறப்பு மான்யம் விடுவிக்கவும், நகராட்சியின் எல்லையினை விரிவாக்கம் செய்து வருவாயில் தன்னிறைவு பெறும் வகையில் ஆட்சி எல்லையினை மாற்றியமைக்கும் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளர் அவர்களையும் தமிழக அரசினையும் ஏகமனதாக கேட்டு தீர்மானம் நிறைவேற்றுதல்.

**தீர்மானம்** :

நகர்மன்ற தலைவர் R.ராமலெட்சுமி முன் மொழிந்த தீர்மானத்தினை துணைத் தலைவர் திரு.நவநீத கிருஷ்ணன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மன்றப் பொருள் 09 :**

திருமதி.எஸ்.பேபி (எ) ரஜப் பாத்திமமா 10 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்.

1. வார்டு எண் 10ல் எனது வீட்டின் பின்புறம் உள்ள தெரு மிகவும் மோசமானதாக இருக்கிறது. ரோடு இல்லாமல் குண்டும் குழியுமாக குப்பை கூளமாக இருப்பதால் அந்த தெருவில் Paver Block செங்கல் ரோடு அமைத்து தர வேண்டி

2. வார்டு எண் 10, கீழப்பள்ளிவாசல் தெருவில் பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் ரோட்டை தோண்டி சிறப்பாக ரோடு அமைத்துதர வேண்டி.

தீர்மானம் :

10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ரஜப் பாத்திமா முன் மொழியும் தீர்மானத்தினை திருமதி.பினாஜா வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 10 :</u>**

திரு.க.சுப்பிரமணியன் 1 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்.

செங்கோட்டை நகரம் காலாங்கரையில் மேட்டு பகுதி சங்கரசுப்பிரமணியன் தெரு, சட்டநாதன் தெரு ஆகிய தெருக்களுக்கு குடி தண்ணீர் சரியான முறையில் கிடைப்பதில்லை. தண்ணீர் திறந்து விட்டால் சுமார் 4 முதல் 5 மணி நேரம் கழித்து தான் வருகிறது. வந்து 1/2 மணி நேரத்தில் அடைக்கும் போது சிலருக்கு தண்ணீர் சரியாக கிடைப்பதில்லை. ஆகையால் அரிகராநதி அருகில் இருந்து காளியம்மன் கோவில் வரை தனியாக பைப்லைன் போட்டு அதில் பழைய பைப்லைன் இணைத்தால் நடு மத்தியில் 1 வால்வு போட்டு இரண்டு லைனாக விடலாம் அல்லது காலாங்கரையில் ஒரு குடி தண்ணீர் தொட்டி அமைத்து அதன் மூலம் மாற்றி சப்ளை செய்ய வேண்டி.

தீர்மானம் :

1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் முன்மொழியும் தீர்மானத்தினை 5வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ஜகன்நாதன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 11 :</u>**

திரு.ந.வேம்புராஜ் 22 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்.

செங்கோட்டை நகராட்சி மேல பஜாரில் உள்ள முஸ்தபா பூங்கா பராமரிப்பு செய்யப்பட்டும் செயல்படாமல் உள்ளது. இரவு நேரங்களில் சுவர் ஏறி குறித்து மது அருந்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆகவே அவ்விடத்தில் பொது மக்களுக்கு பயன்படும் வகையிலும் நகராட்சிக்கு வருவாய் வரும் வகையிலும் கடைகள் உள்ளிட்ட வணிக வளாகம் ஏற்படுத்தினால் மிகவும் பயனள்ள வகையில் இருக்கும், ஆகவே தாங்கள் இதனை பரிசீலனை செய்து அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டி.

தீர்மானம் :

ரஹூம் அவர்கள் 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் நீதிமன்ற தடை உள்ளது என்றார். பெரும்பான்மையான நகர்மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இடம் : செங்கோட்டை
நாள் : 16–05–2022

நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகர்மன்றம்